642

Registered No. M. 1368

ஓம்

# தருமசீலன்.

30 OCT 1923
MADRAS

பத்திராதிபர்: தி. ஆதிநயினர்.

புத்தகம் 6. } உருத்திரோத்காரி வருஷம் ஆவணி மாதம் 1923-வருஷம் ஆகஸ்டு மாதம் { சஞ்சிகை 5.

## விஷய சூசிகை.


| விஷயம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | நீதிச் செய்யுட் சிந்தாமணி | ... 97 |
| 2. | சீரைத்தேடின் ஏரைத்தேடு | ... 98 |
| 3. | கற்சுகக் கண்ணி | ... 99 |
| 4. | இரகு வம்சம் | ... 100 |
| 5. | ப்ரஸ்னோத்தர மாணிக்யமாலா | ... 105 |
| 6. | கல்வி | ... 109 |
| 7. | ஸ்ரீ ஆத்மசிந்தனை | ... 113 |
| 8. | செல்வம் | ... 115 |
| 9. | இரகஸ்யபுரி மர்மம் | ... 118 |


வருஷசந்தா ரூபா 1.] 1923. [தனிப்பிரதி அணா 0–2–0

DHARMASEELAN PRESS. MADRAS

# தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதந்தோறும் வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்களில் வெளிவராதநூல்கள், அறிவை விருத்தி செய்யத்தக்கபல நீதிகள், வியாசங்கள், பலவிநோதக் கதைகள், நாவல்கள், பொது வர்த்தமானங்கள் முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

## சந்தா விவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய விடங்களுக்கு ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச் சஞ்சிகை விலை அணு 0—2—0.

## கவனிப்பு.

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையும் சுத்தமாக எழுதியனுப்ப வேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினால் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களை எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக்கூட்டவும் குறைக்கவும் நமக்குப்பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒருமாதத்திற்கு | ரூபா | 10—0—0 |
| அரைப்பக்கத்திற்கு | ரூபா | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ரூபா | 3—0—0 |

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிநயினர், "தருமசீலன்" ஆபீஸ்.
26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

ஓம்

# தருமசீலன்.

30 OCT 1923

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)


| | | |
|---|---|---|
| புத்தகம் 6 | உருத்திரோற்காரி௵ ஆவணி௴ 1923௵ ஆகஸ்டு௴ | சஞ்சிகை 5. |


## நீதிச் செய்யுட் சிந்தாமணி.

### பயனற்ற நோன்பு இன்ன தென்பது.

"அல்லியும் புல்லு முண்டாங் காரழ லைந்து னின்று
சொல்லிய வகையி னோற்கத் துணியும்வெவ் வினைக ளொன்னிற்
கல்லுண்டு கடிய வெம்புங் கானுறை புறவ மெல்லாம்
புல்லிய வினைகள் வென்று புறக்கொடை காணு மன்றே."

(இ-ள்) (இருவினைகளைப் போக்கவெண்ணி அதற்குரிய உண்மை நோன்பினை இயற்றாமல் போலி நோன்பியற்று கின்றவர்களே!) "அல்லியரிசியாலும் புல்லரிசியாலு முண்டாகும் உணவுகளை யுண்டு நீங்கள் தங்கும் காடாகிய அவ்விடத்திலே நிறைந்த பஞ்சாக்கினி மத்தியில் நின்று எங்கள் பகவனார் சொல்லியவிதமாக நோன்பினைச் செய்ய வெவ்வியனவாகிய இருவினைகளும் நீங்கு மென்பீர்களாயின், கல்லினை ஆகாரமாகவுண்டு, வெதும்புகின்ற கடிய காட்டில் தங்குகின்ற புறாக்களெல்லாம் தம்மைச்சேர்ந்த இருவினைகளையும் வென்று துரத்தி அவற்றின் முதுகைக் காணுமல்லவோ (அதாவது அவற்றைத் தோற்றோடச் செய்யுமல்லவோ)' என்பதாம்.

(விரை) வினைகளை யொழிக்க விரும்புவோர் அகப்பற்றுக்களை யொழித்து பகவானிடத்தே சித்தத்தைச் சேர்க்கவேண்டும்; அங்ஙனம் செயதால் மாத்திரமே அவர்களுடைய வினையொழிந்து அவர்கள் முத்தியடைவார்கள்; அங்ஙனமின்றி அல்லியரிசியுணவு, புல்லரிசியுணவு முதலிய ஆகாரங்களை யுண்ணுவதாலும், பஞ்சாக்கினி மத்தியிலிருப்பதாலும் வினைகள் ஒழிந்து முத்தியின்பம் கைகூடாது. ஆதலின் இத்தகைய நோன்புகள் பயனற்றனவாகக் கூறப்பட்டன. இந்நீதி போலித் தவம்புரிவாரை நோக்கி சீவகனாற் கூறப்பட்டது. இதனால் மேற்போக்காக உலகத்தார் மதிக்கும் பொருட்டுச் செய்யப்படும் போலிவிரதம் முதலியவற்றால் பயனில்லை யென்பதும், உண்மைத்தவமே உயர்கதியிற் செலுத்து மென்பதும் பெறப்படும்.

அல்லியும், புல்லும் அவற்றின் அரிசிகளாலாகும் உணவுகளை யுணர்த்தி நின்றன. வெம்பும் கடியகான் எனமாற்றுக. புறக்கொடை-புறங்கொடுத்தல்; அதாவது, முதுகு காட்டியோடல்.

(சீவகசிந்தாமணி. 1430)

# தருமசீலன்.

## உருத்திரோற்காரிஷு ஆவணிமீ.

"சீரைத்தேடின் ஏரைத்தேடு."

---

இதன்பொருள்:—(உலகத்தில் சௌக்கியத்துடன் வாழ விரும்பும் மனிதனே! நீ) சீரை-சிறப்பை, அதாவது, சௌக்கியமாக வாழும் கீர்த்தியை), தேடின்-அடைவதற்கு நாடுவாயானால், ஏரை-ஏருழுவதால் செய்யப்படும் பயிர்த்தொழிலை, தேடு-நீ தேடிக் கொள்வாயாக" என்பதாம்.

உலகத்தில் எல்லாத் தொழில்களிலும் பயிர்த்தொழிலே சிறந்ததாம். எதனாலெனில், உழவர்கள் செய்யும் பயிர்த்தொழிலால் பற்பல விளைவுகள் உண்டாகின்றன. அவற்றை மனிதர் பலரும் தமக்கும் தெய்வங்கட்கும் உணவாக உபயோகிக்கின்றார்கள்; மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ்வன முதலிய ஜீவவர்க்கங்களும் அவற்றால் ஜீவிக்கின்றன; திருடர்களும் கூட இவற்றால் ஜீவிக்கின்றார்களெனில் இவற்றை விளைவிக்கும் பயிர்த்தொழிலின் பெருமையைப்பற்றி வேறு கூறவும் வேண்டுமோ? அரசர்களும் கூட உழவுத்தொழில் புரியும் குடிமக்களாலேயே உயர்கின்றார்கள். சகல தானதர்மங்களும் உழவுத் தொழிலால்வரும் பயனைக்கொண்டே நடை பெறுகின்றன. பயிர்த்தொழிலில் இல்லையெனில் நிச்சயமாக உலகம் நடைபெறாதென்றே சொல்லலாம். ஆதலின் மனிதனுக்கு மிக்க சிறப்பை யுண்டாக்குவது பயிர்த்தொழிலே யன்றி வேறெதுவு மின்றாம். உத்தியோகம் முதலியனவும் இழிவையே உண்டாக்குவனவாம். இது பற்றியே பெரியோர்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

என்றும்,

"ஓதுவானெல்லாம் உழுவான் தலைக்கடையில்"

என்றும்,

"மேழிச்செல்வம் கோழைபடாது"

2 10453

என்றும்,

இன்னும் பற்பல வாறாகவும் உழவுத்தொழிலைச் சிறப்பித்துக் கூறி யிருக்கின்றார்கள். இவற்றை அனுசரித்தே இச்சூத்திரமும் கூறப்பட்டுள்ளது. ஆதலின், உலகத்தில் சிறப்படைய விரும்புவோர் பயிர்த்தொழிலைப் பெரிதாகப் புரியவேண்டும்.

இங்ஙனம் பெரியோர் நீதி கூறியிருந்தும் இக்காலத்தவர்கள் அதனைச் சிந்தியாமல் உத்தியோகம் முதலிய அடிமைத் தொழில்களைப் பெரியனவாகக் கருதி மேற்கொண்டு எல்லாவற்றினும் மேம்பட்டதாகிய பயிர்த்தொழிலைக் கைவிட்டு வருகின்றார்கள். இதனாலேயே நம் நாட்டில் வறுமைப்பிணி பரவிவருகின்றது. எக்காலத்தில் நம் நாட்டவர், ஜீவாதாரமாகிய பயிர்த்தொழிலை மேற்கொள்வார்களோ அப்போதுதான் நம் தேசம் க்ஷேமத்தையடையும். ஆதலின், ஒவ்வொருவரும் இந்நீதியைக் கடைப்பிடித் தொழுகுவார்களாக.

(திருவருட்சகாயம்.)

---

## நற்சுகக் கண்ணி.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை-4, பக்கம்-77.)

17. இளமையிலே கல்வி யிசைந்திடவே கற்ற
வளமுடையார்க் கென்றென்றும் வந்தடையும் நற்சுகமே.
18. தேகபலங் குன்றுமுன்னே செல்வத்தை தேடியவி
வேகமுற்றாற் கெப்பொழுதும் மேவியிடும் நற்சுகமே.
19. தந்தைமுதல் முன்னோர்கள் தாம்தேடி வைத்தபொருள்
சிந்தாத பேர்க்கென்றுஞ் சேர்ந்துவரும் நற்சுகமே.
20. மன்னர்செங்கோ லுக்கடங்கி மண்டலத்திலே யிருந்து
அன்னவர்மேல் பத்தி யடைவார்க்கு நற்சுகமே.
21. ஆகாத காரியத்தை ஆத்திரத்தா லேமுடிக்கப்
போகா திருக்கின்ற புண்ணியர்க்கு நற்சுகமே.
22. சென்றதற்கு வாடாமல் தீர மனதுடனே
நின்றபெரி யோர்க்கிந்த நீணிலத்தில் நற்சுகமே.
23. கைத்தொழிலைச் செய்து கலங்கா திருப்பவர்க்கு
இத்தரையில் துன்ப மிராதென்றும் நற்சுகமே.
24. சுயபாஷை கற்றதிலே சொல்லுகின்ற நீதி
நயமாகக் கொள்பவர்க்கு நானிலத்தில் நற்சுகமே.
25 மடத்தனத்தால் தற்பெருமை மனத்திலே கொள்ளா
தடக்கமுடனே யிருப்பார்க் காகுமிங்கு நற்சுகமே.

(தொடரும்)

சேம்பைக்கிழார்.

N23.645

## இரகு வம்சம்

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-4, பக்கம்-89.)

(மூன்றாவது ஸர்க்கம்)

அப்பால் ஸுதக்ஷிணை கர்ப்பலக்ஷணத்தைப் பெற்றாள். அது, சமீபத்தில் பயனடையும் புருஷனது மனோரதமாயும் தோழிமார்களின் கண்களுக்குச் சந்திரி கோதயமாயும் இக்ஷ்வாகு குலத்தின் அபிவிருத்திக்குக் காரணமாயும் இருந்தது. அவ்வரசி, தனது சரீரம் இளைத்துப்போனமையால் அற்பமான ஆபரணங்களை அணிந்திருந்தனள். அவளது முகம் வெள்ளாலாத்தி மலர்போல் வெளுத்திருந்தது அதனால் அவள், அரைகுறையாய் மறைந்த நக்ஷத்திரங்களையும் அற்பமாகப் பிரகாசிக்கும் சந்திரனையும் பெற்றிருக்கும் விடியற் காலம்போலக் காணப்பட்டாள். வேனிற்காலத்து முடிவில் வேழும் மேகம் பெய்த நீர்த்துளிகளால் நனைந்த கானகக்கூட்டத்திலுள்ள குட்டையை முகர்ந்து திருப்தியடையாததுபோல, அரசன் தன்மையில் மண்வாசனையுள்ள மனைவியின் முகத்தை முகர்ந்து பார்த்துப் போதுமென்று திருப்தி அடையவில்லை. இந்திரன் ஸ்வர்க்கத்தை ஆள்வதுபோலத் தனது புத்திரன் திசைகளெங்கும் தடையின்றிச் செல்லும் தேரையுடையவனாகிப் பூமியைப் புஜிக்க (ஆளப்போகிறான் என்ற காரணத்தால் ஸுதக்ஷிணை முதலில் பூமியைச் சேர்ந்த மண்ணைப் புசிப்பதில் மனதைச் செலுத்தினாளே யன்றிப் பிற வஸ்துக்களில் மனதை வைக்கவில்லை.

'உத்தரகோசல' தேசத்திற்குத் தலைவனான அரசன், தன் மனைவியின் தோழியர்களைப் பார்த்து, மாதர்காள்:—"நமது ஸகியான மகதராஜன் பெண் தனக்கு வேண்டும் பொருளை வெட்கத்தினால் என்னிடம் சொல்லு கின்றாளில்லை; அவளுக்கு எப்பொருளில் விருப்பமிருக்கின்றது?" அதை என்னிடம் சொல்லுங்கள். என்று அடிக்கடி கேட்டாள். ஸுதக்ஷிணை மசக்கையினால் எப்பொருளை விரும்பினளோ, அப்பொருளை அரசன் அப்பொழுதே வரவழைத்துக் கொடுத்தனன். நாணேற்றிய வில்லையுடைய இவ்வேந்தன் ஸ்வர்க்கத்திள்ள பொருளையும் சுளுவில் கொணர்ந்து விடுவான். அரசி, கிரமமாய் மசக்கைத் தொந்தரைகளைக் கடந்ததும் அவளுடைய அவயவங்கள் பருக்கத் தொடங்கின. அப்பொழுது அவள், பழைய சருகுகளை யுதிர்த்துப் புதிய அழகிய தளிர்களைப் பெற்ற கொடியைப்போல விளங்கினாள்.

214453

சில நாட்கள் சென்றதும் அரசியின் இருமுலைகள், மிகவும் விம்மிப்பருத்துக் காம்புகளைச் சுற்றிலும் கறுத்து விளங்கின. அப்பொழுது அவை, தும்பிகள் சூழ்ந்த இனிய தாமரை மொக்குகளின் சோபையை வென்றன. அரசன் கர்ப்பிணியான தன் மனைவியைப் பார்த்ததும் புதையலை வயிற்றிலுடைய பூமியைப்போலவும் உள்ளே மறைந்திருக்கும் தீயையுடைய வன்னி மரத்தைப்போலவும் உள்ளே ஓடுகின்ற நீரையுடைய ஸரஸ்வதீ நதியைப்போலவும் அவளை நினைத்தான். தீரனான வேந்தன், தான் அரசியிடம் கொண்டிருக்கும் காதலுக்கும், ஔதாரியத்திற்கும், புஜபலத்தினால் சம்பாதித்த செல்வங்களுக்கும், (புத்திரன் பிறக்கப் போகிறானென்ற) சந்தோஷத்திற்கும் தகுந்தபடி, “பும்ஸவனம்” முதலிய கிரியைகளை முறையே செய்தான். மன்னவன் அரண்மனைக்குள் வந்ததும், ஸுதக்ஷிணை, லோகபாலர்களின் அம்சம் நிறைந்த கர்ப்பத்தின் பளுவால் சிரமப்பட்டு ஆஸனத்திலிருந்து எழுந்து மரியாதைச் செய்வதற்காகக் கையைத் தூக்கும்பொழுது, அவளுடைய கருவிழிகள் அசைவதைக் கண்டு மகிழ்ந்தனன்.

பின்பு பாலசிகிச்சையில் வல்லமையுள்ள ஆப்தர்களான வைத்தியர்கள் கர்ப்பம் விருத்தியடையுமாறு வைத்தியம் செய்தனர். அப்பொழுது ஸுதக்ஷிணைக்கும் பத்தாவது மாதம் பிறந்து விட்டமையால் பிரசவத்தை எதிர்பார்த்தவளாயிருந்த அவளை அக்காலம் அரசன் மேகத்தோடு கூடின ஆகாயத்தைப்போலச் சந்தோஷத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது மூன்று சக்திகளும் குறைவற்ற பலனை உண்டாக்குவதுபோல, இந்திராணிபோன்ற ஸுதக்ஷிணை ஓர் புத்திரனைப் பெற்றனள். உச்சமடைந்து அஸ்தமனமடையாத ஐந்து கிரகங்களும் “அப்புத்திரன் சக்ரவர்த்தியாவன்” என்பதைத் தெரிவித்தன.

அப்பொழுது எல்லாத் திசைகளும் பிரகாசமாக விளங்கின; காற்று சுககரமாக வீசிற்று; அக்னியானது பிரதக்ஷிணமான ஜ்வாலையோடு ஹவிஸ்ஸை ஏற்றுக்கொண்டது; இவ்விதம் யாவும் சுபசூசகமாகவே ஆயின. ஏனெனில், இப்படிப்பட்டவர்களின் பிறப்பானது உலகத்தின் க்ஷேமத்திற்கே யாகின்றது. சுகமாகப்பிறந்த அக்குழந்தையின் இயற்கையான காந்தி, பிரஸவ கிரகத்திலுள்ள படுக்கையைச் சுற்றிலும் வீசிற்று. அதனால் நடுநிசியில் எரியும் விளக்குகள் ஒளி மங்கியவைகளாய் சித்திரத்தில் எழுதிய தீபங்கள்போல் விளங்கின. அந்தப் புரத்திலிருக்கும் ஜனங்கள் திலீபனிடம் வந்து

"தங்களுக்குப் புத்திரன் பிறந்தான்" என்று சொன்னார்கள். அவ்வெழுத்துக்கள் அவனுக்கு அமிருதத்திற்குச் சமமாயிருந்தன; உடனே அரசன் அவர்களுக்கு மதிபோன்ற வெண்குடையும், இரு சாமரங்களும் ஆகிய மூன்று பொருள்களைத் தவிர, பாக்கியுள்ள விலை மதிக்க மொண்ணாதப் பொருள்களை யெல்லாம் சன்மானமாகக் கொடுத்தான்.

பின்பு பார்த்திவன் அந்தப் புரத்திற்கு வந்து, காற்றில்லாத இடத்திலுள்ள தாமரை மலர்போல் அசைவற்ற தன் கண்களால் அழகிய புதல்வன் முகத்தைப் பார்த்தான். அப்பொழுது அவனுக்கு உண்டான சந்தோஷம் சந்திரோதயத்தினால் மிகுந்த சமுத்திரப் பிரவாகம்போல, தன்னுள் அடங்கவில்லை. உடனே தபஸ்வியும் புரோகிதருமான வஸிஷ்ட முனிவர், அரண்ணியத்திலிருந்து அரண்மனைக்கு வந்து அக்குழந்தைக்கு "ஜாதகர்மம்" முதலியவற்றைச் செவ்வனே செய்தனர். பின்பு அக்குழந்தை, சமுத்திரத்திலுண்டான இரத்தினம் சாணைக்கல்லில் கொடுத்து மெருகு வைத்து எப்படி பிரகாசிக்குமோ, அப்படி விளங்கலானான். அரசனுக்குப் புத்திரன் பிறந்ததைக் கேட்டு யாவரும் மகிழ்ந்தனர். உடனே திலீபன் அரண்மனையில் மங்கள வாத்தியங்கள் செவிகளுக்கு இன்பமாய் முழங்கின. தாஸிகள் நர்த்தனஞ் செய்தனர் ஆகாயத்திலும் 'தேவதுந்துபி' வாத்தியங்கள் முழங்கின. அப்ஸர ஸ்திரீகள் நடனம் புரிந்தனர்.

நன்கு பரிபாலிக்கும் திலீபனுடைய இராஜ்யத்தில் குற்றவாளி (சிறைச்சாலையி லடைக்கப்பட்டவன்) ஒருவனும் இல்லாமையால் அரசன், புத்திரன் பிறந்தமையால் மகிழ்ந்து ஒரு குற்றவாளியை யேனும் விடுவிக்க முடியவில்லை. ஆனால் அரசன், அப்பொழுது "பிதுர்க்கட்"னென்னும் பந்தத்திலிருந்து தான் ஒருவன் மட்டும் விடுதலை அடைந்தனன். சொல்லையும் பொருளையு முணர்ந்த மன்னவன், "இக்குழந்தை சாஸ்திரத்தின் முடிவையும் போரில் பகைவரின் அழிவையும் காண்பன்" என்ற காரணத்தினால் * "லகிகத்தௌ" என்ற தாதுவின் பொருளையறிந்து, தன் புதல்வனுக்கு "இரகு" என்று நாமகரணஞ் செய்தான். பாலசந்திரன், சூரிய கிரணத்தின் சம்பந்தத்தினால் வளர்வதுபோல, அந்த இரகு, நிறை செல்வமுள்ள தந்தையின் முயற்சியினால் மனோகரமான சரீரத்திலும் அவயவங்களாலும் தினந்தோறும் வளர்ச்சி யடைந்தனன்.

---

* 'லகி'யென்னும் தாதுவுக்கு அடைதல் என்பது பொருள்.

பார்வதியும் பரமசிவனும் 'ஷண்முக'னால் மகிழ்ந்ததுபோல வும், இந்திராணியும் இந்திரனும் * ஜயந்தனால் சந்தோஷித்தது போலவும், அவர்களை ஒத்த 'ஸுதக்ஷிணை'யும் 'திலீப'னும் ஷண்முக னையும் ஜயந்தனையும் ஒத்திருந்த புத்திரனால் மகிழ்ச்சியடைந்தனர். மனதை வசியஞ்செய்யும் அன்பானது, † சக்கிரவாகப் பறவைக ளிடம்போல அத்தம்பதிகளிடம் பரஸ்பரம் ஆசிரியமாகக்கொண்டு ஏற்பட்டிருந்தது. அவ்வன்பு அன்னியனான புத்திரனால் பிரிக்கப் பட்டிருந்தபோதிலும் ஒருவர்க்கொருவர்மீது மேன்மேலும் வளர் ந்துவந்தது. அப்புதல்வன் மாற்றாந்தாய் முதன்முதலில் சொல்லிக் கொடுத்த வார்த்தையைச் சொன்னான்; அவளுடைய விரலைப்பிடித் துக்கொண்டு நடந்தான்; நமஸ்கார ‡ சிக்ஷையினால் வணக்கமுள்ளவ னாயினன்; இவ்விதம் இரகு தந்தைக்கு மகிழ்ச்சியை உண்டு பண்ணி னான்.

திலீபன் தன்மேல் அமிருதத்தை வருஷிப்பதுபோல சரீரசம் பந்தத்தினால் இன்பமளிக்கும் புத்திரனை மடிமீதேற்றி வைத்துக் கண்களைச் சிறிது மூடிக்கொண்டவனாய், வெகுநேரம் 'புத்திரஸ்பர்ச சுக'த்தை அநுபவித்தனன். பிரம்மதேவன், ஸத்வம் ரஜஸ் தமஸ் என்பவற்றுள் முந்தியதை முக்கியமாகக்கொண்ட தனது 'அவதார' பேதத்தினால் தனது ஸ்ருஷ்டியை ஸபலமாக நினைத்ததுபோல, நீதி வழுவாத மன்னவன் சிறந்த பிரவியையுடைய இரகுவினால் தன் வம்சத்தைப் 'பிரதிஷ்டை' யுடையதாக எண்ணினான். சிகை வைத் துக்கொண்ட இரகுராஜன், அசையும் 'காகபக்ஷ'ங்களையுடைய நண் பர்களான மந்திரி குமாரர்களோடு சேர்ந்துகொண்டு, (முதலை முத லியவை) நதியின் § முகத்துவாரத்தினால் கடலில் நுழைவதுபோல, 'லிபி'யைச் சரிவர கிரகித்துக் கொண்டமையால் சொற்களை யெல் லாம் அறிந்து கொண்டனன். பின்னர் அறிவுள்ள ஆசிரியர்கள், விதிப்படி "உபநயனம்" செய்விக்கப்பெற்றவனும், குருவிடம் பிரிய முள்ளவனுமான இரகுவுக்குக் கல்வியைக் கசடறக் கற்பித்தனர். அவர்களின் முயற்சியும் இரகுவிடம் பயனடையாமற் போகவில்லை. நல்வழியில் செய்த முயற்சி பயனளிக்குமன்றோ? சூரியன் காற்றி னும் மிகுந்த வேகமுள்ள குதிரைகளால் நான்கு கடல்களைப்போ ன்ற நான்கு திசைகளைத் தாண்டுவதுபோல, சிறந்த மதியுள்ள இர

* ஜயந்தன் = இந்திரனது புதல்வன். † சக்கிரவாகம் = நிலா முகிப்புள். ‡ சிக்ஷை = அப்பியாசம். § முகத்துவாரம் = கடலிற் சேருமிடம்.

குவும் * புத்தியின் முழுக்குணங்களால் அத்தகைய † நான்கு வித்தைகளையும் முறையே கற்றான் அவன் சுத்தமான "குரு" மிருகத்தின் தோலை யணிந்துகொண்டு மந்திரங்களோடு கூடின அஸ்திரங்களைத் தந்தையிடமிருந்தே அப்பியசித்தனன். அவன் தந்தை பூமியில ஓரே சக்ரவர்த்தியா யிருந்ததுடன் வில்லாளிகளுள் முதல்வனுகவும் இருந்தனன். இரகு மன்னன் காலக்கிரமத்தில் யௌவனத்தினுல் இளமைப் பருவத்தைக்கடந்து, பெருங்காளைப் பருவத்தைப் பெற்ற இளங்கன்று போலவும், தலைமையானையின் தன்மையைப் பெற்ற குட்டியானை போலவும், காம்பீரியத்தினுல் மனோகரமான சரீரத்தைப் போஷித்து வந்தான்.

பின்னர் தந்தையான திலீபன், "கோதான விதி"யைச் செய்துவிட்டு, இரகுவுக்கு விவாகமென்னும் 'தீக்ஷை'யை முடித்து வைத்தனன். அப்பொழுது ராஜகன்னிகைகள் சிறந்த கணவனுன இரகுவைப்பெற்று, சந்திரனை அடைந்த தக்ஷகுமாரிகள் (நக்ஷத்திரங்கள்) போல விளங்கினர்கள். நுகத்தடிபோல் நீண்ட கைகளையும், பலம்பொருந்திய தோள்களையும், கதவுபோல் பரந்த மார்பையும், விசாலமான கழுத்தையும் பெற்றுள்ள இரகு, தேகத்தின் புஷ்டிவன்மை(யினுல் தந்தையைத்தோற்கச் செய்தனன். ஆயினும் வணக்கத்தினுல் தாழ்மையாகவே இருந்தான்.

அப்பால் திலீபன், தான் வெகுகாலம் வசித்ததும், மிகப்பெரியதுமான, செங்கோல் செலுத்தும் பளுவைக் குறைக்க வெண்ணியவனுய், "நமது குழந்தை இரகு, இயற்கையாலும் சாஸ்திராப்பியாசத்தினுலுண்டான அறிவாலும் வணக்க முள்ளவன்" என்று நிர்மாணித்து, "இளவரசுப்பட்டம்" சூட்டிவைத்தனன். திருமகள் பழைய தாமரைமலரிலிருந்து புதிய தாமரைமலரை அடைவதுபோல, குணங்களை விரும்பும் ராஜ்யலக்ஷ்மி, திலீபனென்னும் மூலஸ்தானத்திலிருந்து சமீபத்திலுள்ள இளவரசனென்னும் அதே ஸ்தானத்தை அம்சத்தினுல் அடைந்தனள். சகாயமான காற்றோடு கூடின தீபோலவும் சரத்காலத்திலுள்ள சூரியன்போலவும், மதநீருள்ள யானைபோலவும், இரகுவோடு கூடின திலீபன், பகைவரால் சிறிதும் அடக்கமுடியாதவனுக ஆயினன். நூறுயாகஞ் செய்கோ

---

* புத்தியின் முழுக்குணங்களாவன = சுச்ருஷை, சிரவணம், கிரணம், தாரணை, ஊஹாபோகம், அர்த்தவிஞ்ஞானம், தத்துவஞானம் இவைகளாம்.

† நான்கு வித்தைகளாவன = ஆத்மவித்தை, வேதங்கள், பொருணூதாரநூல் ராஜநீதி என்பனவாம்.

(இந்திர)னை உவமையாகக் கொண்ட திலீபன், யாகத்திற்குரிய குதிரைகளைக் காத்துவருமாறு கையில் வில்லுடன் இரகுவையும் அவனைச் சூழ்ந்து பல சிற்றரசர்களையும் அனுப்பிக் கொண்டுற்றான் பது யாகங்களை இடையூறின்றிச் செய்து முடித்தான் அதன் பிறகு விதிப்படி யாகஞ்செய்த திலீபன், மறுபடியும் யாகஞ்செய்வதற்காக ஓர் குதிரையை எங்கும் தடையின்றிச் சென்று சுற்றிவருமாறு விட்டான். இந்திரன் அக்குதிரையை வில்லைப்பிடித்து நிற்கும் காவலாளிகளின் முன்னிலையிலேயே மறைந்த சரீரத்தையுடையவனாய் அபஹரித்தான்.

"கோதானவிதி" = பிராமணன் முதலிய மூவருக்கும் செய்யவேண்டிய ஸம்ஸ்காரம்.

(தொடரும்)

**By: M. M. Narayanasawmy Aiyer,**
*Mudikondan.*

---

ஸ்ரீஜிநாய நம:

ப்ரஶ்நோத்தர மாணிக்யமாலா

## ப்ரஸ்னோத்தர மாணிக்யமாலா.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-4, பக்கம் 91)

**11.** கோ முநீந்த்ர ஜிநஸ்ய கதி பேதா:?

கோ முனீந்தர ஜினஸ்யகதி பேதாஹ?

### ஓ முனிச்ரேஷ்டனே தீர்த்தங்கரரில் எத்தனை பேதம்.

ணாமஜிணா ஜிணணாமா
ட்டவண ஜிணா தஹ ஸந்தாவஸவஸி மாவோ
த்³வஜிணா ஜிண ஜீவா.
பா⁴வஜிணா ஸமவ ஸரணத்தா.

ணமஜிண ஜிணணாமா
டவண ஜிணதக சுதாசபடிமாவோ
தவ்வஜிண ஜிண ஜீவா
பாவஜிண சமவ சரணத்தா.

(இதன் பொருள்.) விரஷப அஜித முதலான ஜினநாமங்களினாலெ நாம ஜீனேஸ்வரராக ஆகிறார்கள். ரத்ன தாம்ரபாஷாணாதிகளினால் நிர்மாணம் செய்த பிரதிமைகளினாலே அவர் நாமஸ்தாபனா ஜினேஸ்

வராவார்கள் அவருடைய ஜீவன்கள் நிக்ஷேப ஜிநேஸ்வராவார்கள் இன்னும்சமவசரண மத்தியிலே விராஜமானரான ஜிநேஸ்வரரை பாவ ஜிநேஸ்வரரென்று அறியவேண்டும் இந்த பிரகாரம் ஸ்ரீ ஜினேஸ்வரர்களில் நாமஸ்தாபனா த்ரவ்ய பாவ என்று நாலுபேத முண்டு.

**12.** [illegible]

போமுனீந்தா சினச்யகுணாஹ கே?

**வாருய்முனிந்தரனே தீர்த்தங்கரருடைய குணங்களேதுகள்**

வரசுஜஸயவ உதீஸா
அஷ்டமஹா பாடிஹார ஸம்ஜுத்தா
சுணந்தவ உட்டய ஸஹியா
வீயராஆ சுரஹணாஹஷ.

வர அயிசயச உதீசா
அட்டமகா பாடிஹார சம்ஜுத்தா
அணந்தச உட்டய சகியா
வீயாலா அரஹணாஹச்ச

(இத) * 34 அதிசயங்கள் 8 ப்ராதிஹார்யங்கள் (அசோகவ்ருக்ஷ) சுரபுஷ்பவ்ருஷ்டி) திவ்யத்வனி, சாமரம், ஸிம்மாசனம், பாமண்டலம், துந்துபி, முக்குடை, அனந்த சதுஷ்டயங்கள்:—அனந்தஞானம், அனந்ததர்சனம், அனந்த வீர்யம், அனந்தசுகம் இப்படி ஒன்றுகூடி 46 அதிசயங்கள் அருகத்பரமேனிடமிருக்கிறது (இது தவிர அவருக்கு அனந்த குணங்களுண்டு அதுகளை கேவலிகளே தெரியலாம்.

| சஹஜாதி சயமாவது | கர்மக்ஷயஜாதி சயமாவது |
|---|---|
| 1. வேர்வை யில்லாதிருத்தல் | 1. சதபோஜன க்ஷாமமின்மை |
| 2. மலமூத்ரமின்மை | 2. ஆகாசகமனம் |
| 3. ரத்தம்பால் போன்றது | 3. கொல்லாமை |
| 4. நாலுபக்கமும் சமமான அழகு | 4. ஆஹாரமின்மை |
| 5. எந்த ஆயுதத்தாலும் புண்படுத்த [கூடாத தேகம் | 5. உபசர்க்கமின்மை |
| 6. அழகில் உவமையில்லாமை | 6. பார்வைக்கு நாலுமுகமாய் காணப் [படுதல் |
| 7. பரிமளமுள்ள சரீரம் | 7. எல்லா சாஸ்திரங்களையுமறிதல் |
| 8. 1008 ஆயிரத்தெட்டு சுபலட்சண [முள்ள மருக்கள் | 8. நிழலில்லா சரீரம் |
| 9. பிரியஹிதவார்த்தை | 9. கண்கள் இமைத்தலில்லை |
| 10. அமித குணங்கள் | 10. நகங்கள் மயிர்கள் வளராதிருத்தல் |

* ஸ்ரீ அருகத்பரமேஸ்வரன் இவ்வுலகிலிருக்குங் காலத்தில் அடையும் அதிசயங்கள் மூன்று அவை சகஜாதிசயம் கர்மக்ஷயா, திசயம் தெய்வீகாதிசயம் என பெயர் பெறும்.

## தெய்வீகாதிசயமாவ்து

1. சர்வார்த்தமாகதீ பாஷா
2. சர்வஜன மைத்ரி
3. சர்வர்த்து பலயுக்த விருஷம்
4. ஆதர்சசமபூமி
5. சுகந்த வாயு
6. சர்வஜீவானந்தம்
7. நிஷ்கண்டக யோசனபூமி
8. கந்தோதகன் ரஷ்டி
9. யாதன்யாசபத்ம
10. தான்ய சம்பூர்ணபூமி
11. ஆகாச நிர்மலதா
12. தேவாக மனம்
13. தர்ம சக்ரம்
14. அஷ்டத்ரவ்யம்

13. [illegible]
[illegible]?

போ முனிபுங்கவஸ்ரீ ஜினேந்த்ரேண தோஷா வித்வஸ்தாஸ்தேகே ?

### ஓ முனீந்தரனே
### தீர்த்தங்கரராலே கெடுத்த தோஷங்களேதுகள்.

14. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

க்ஷுதாத்ருஷாபயம் த்வேஷோ ராகோ மோகச்சசிந்தனம்
ஜராருஜச்சம்ருத் யுச்ச ஸ்வேதஹு கேதோ மதோரதிஹு
விஸ்மயோ ஜனனம் நித்ரா விஷாதோஷ்டாத சத்ருவம்
ஏதைதோஷைர்விநிர்முக்தஹு சோயமாப்தோ ஜினோத்தமஹு

(இன் பொருள்.) பசி, தண்ணீர்தாகம், விரோதம் (திரஸ்காரம்), ஆசை, மோகம், சிந்தை, கிழத்தனம், ரோகம் மரணம், வேர்வை, துக்கம், கர்வம், காமசேவை ஆச்சர்யம், பிறப்பு, நித்ரை, கலகம் இந்த பதினெட்டு தோஷங்களையும் கெடுத்தவன் எவனோ அவனே ஆப்தஞ்ஞ ஜினோத்தமன்.

15. [illegible]
[illegible]
[illegible]?

அகோ குருதேவ. அருகத்பிரபுர்ஜனன்
ஸ்வயம் ஹஸ்தாவலம்பேநேண மோக்ஷம் நயதி
அதவா உபசா ரேண ?

(இ-ள்.) குருவர்யரே அருகத் பிரபுக்கள் பக்தர்களை மோட்சத்திற்கு தங்களுடைய கையி னின்றும் அடைவிப்பவரா அல்லது உபசாரத்தினாலே அடைவிப்பவரு?

அரிஹம்தோ அஸமத்தா
  தாரணயோ யாவ பவஸம்ஸாரே
மக்கேண தேஸண குஸலோ
  தரம்தி தே மக்கலக்கம்தீ.

அரிகந்தோ அசமத்தோ
  தாரண லோயாயி திக்க சம்சாரே
மக்கண தேசண குச்லோ
  தரந்திதே மக்கலக்கந்தி.

(இ-ள்.) இந்த தீர்க்க சம்சாரத்தில் அகபட்டுக் கொண்டிருக்கிற ஜனங்களை தாண்டி வைப்பதற்கு அசமர்த்தரானலும் அருகத் பிரப்புக்கள் மோட்சப்ராப்தியாகிற உபாயத்தை காண்பிப்பதில் சந்தோஷத்தையுடையவர்கள் அவராலே காண்பிக்கப்பட்ட மார்க்கத்தினலே நடப்பவர்கள் மோட்சத்தை அடைகிருர்கள் ஆகையினலே அருகத் பரமேஸ்வரர்கள் மோட்சத்தை கொடுக்கிருர்கள்.

16. ஹோ ஸ்வாமிந் கீத்ருஸோ தர்மஃ?
போ சுவாமின் கீத்ரசோ தர்மஹ?

## ஓ சுவாமிகளே தர்மத்தினுடைய ஸ்வருபமென்ன

அஹிம்ஸாபரமோ தர்மோ தஸலக்ஷண ஸம்யுதஃ
த்விதோ ஜிநவக்த்ராப்ஜ ஸம்ஜாதோ மோக்ஷதாயகஃ
அகிம்சாபர மோதர்மோ தச லட்சண சம்யுதஹ
த்விதோஜின வக்த்ராப்ஜா த்சம்ஜாதோ மோட்சதா
[யகஹ

(இ-ள்.) பிராணிகளை கொல்லாமலிருப்பது உத்தமதர்மம். க்ஷமா. மார்தவ. ஆர்ஜவ. சத்ய. சௌச. சம்யம. தப. த்யாக. ஆகிஞ்சின்ய. ப்ரம்மசர்ய மென்றும் பத்துவிதமாய் இருக்கிறது இந்த தர்மமானது ஸ்ரீஜி நெஸ்வரருடைய வாக்கு னின்றும் பிரகாசிக்கப்பட்டது அதில் (ச்ராவகதர்மம் முனிதர்மம் என இருவகையுண்டு)

17. ஹோ முநீந்த்ர நிர்க்ரந்தாசார்யாஃ கே?
போ முனிந்த்ர நிக்ரந்தா சார்யாஹ கே?

### ஒ முனீந்தரனே நிக்ரந்தாசார்யர் யார்

𑌯𑍇 𑌰𑌤𑍍𑌨𑌤𑍍𑌰𑌯𑌧𑌾𑌰𑌿𑌣𑍋 𑌦𑌶𑌵𑌿𑌧𑍇 𑌧𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌿𑌯𑍇 𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃
𑌲𑌾𑌭𑌾𑌲𑌾𑌭𑌸𑌮𑌾𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯 𑌪𑌰𑌾 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌕𑍍𑌷𑌯𑌮𑍍
𑌯𑍇 𑌷𑌡𑍍𑌜𑍀𑌵𑌵𑌿𑌰𑌾𑌧𑌨𑍈𑌕𑌵𑌿𑌰𑌤𑌾 𑌮𑌾𑌨𑌾𑌪𑌮𑌾𑌨𑍇 𑌸𑌮𑌾
𑌯𑍇 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌪𑌿 𑌨𑌿𑌸𑍍𑌪𑍃𑌹𑌂 𑌵𑍍𑌰𑌤𑌤𑌪𑍋 𑌵𑌨𑍍𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌤𑌾𑌨𑍍𑌗𑍁
𑌰𑍂𑌨𑍍

யேரத்னத்ரய தாரிணோதசவிதே தர்மப்ரியே சம்ஸ்ரிதாஹ
லாபாலாப சமாஜி தேந்த்ரிய பராத்யாயந்தி கர்மக்ஷயம்
ஏஷட்ஜீவ விராதனைக விரதாமானப மானேசமா
யேகுர்வந்தியபி நிஸ்பாகம் வரதபோ வந்தாம்யகம் தான்குருன்

(இ-ள்.) சம்மியக்தரிசன சம்மியக்ஞான இன்னும் சம்மியக் சாரித்திரமென்கிற ரத்ன த்ரயங்களை தரித்திருப்பவரோ, உத்தமக்ஷமாதி தச லட்சணிக தர்மங்களை காப்பாற்றுபவரோ, லாபமாகட்டும் நஷ்டமாகட்டும் ஆனந்த, இன்னும் துக்கத்தை அடையாமலே இருப்பவரோ, இந்திரியங்களை ஜெயித்தவரோ, கர்ம நாசத்தை த்யானிப்பவரோ, சஷ்ட்காய ஜீவன்களுக்கு ஹிம்சையாகாமல் எச்சரிக்கையா யிருப்பவரோ, மானபமானங்களில் சமபுத்தியுள்ளவரோ பற்றற்றவராயிருந்து, தீவ்ரதபச்சரணங்களை செய்பவரோ அவரே நிக்ரந்த முனிகள் அப்பேர்பட்ட முனிகளை நான் நமஸ்கரிக்கிறேன்.

இன்னும் வரும்.

விருதூர். திரு. அப்பாண்டை நயினர்.
அனந்தபுறம் ஸ்கூல் டீச்சர்
ஜாகீர் ஆரணி.

---

### ஸ்ரீ-வித்ய-வித்யே.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6. சஞ்சிகை-4. பக்கம்-94.)

𑌚𑍌𑌰𑌾𑌦𑌿𑌦𑌾𑌯𑌾𑌦𑌸𑍁𑌤𑌪𑍍𑌰𑌭𑍂𑌭𑌿𑌰𑌹𑌾𑌰𑍍𑌯𑌪𑍂𑌜𑍍𑌯𑌂 𑌸𑌕𑌲𑍇
𑌵𑌿𑌲𑍋𑌕𑍇
𑌯𑌨𑍍𑌨𑌂 𑌵𑌶𑍇𑌷𑌾𑌂 𑌨𑌯𑌨𑍇𑌨 𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌰𑌾𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌧𑌰𑌾 𑌵𑌹𑌨𑍍𑌤𑌿

திருடன் தாயாதி பிள்ளை அரசன் இவர்களால் அபகரிக்க முடியாதது. சகல லோகத்திலும் பூஜிக்கத் தகுந்தது இதைப் பார்க்கினும் தனம் கண்ணினால் பார்த்ததில்லை அப்பேர்பட்ட ஞானத்தை புண்ணிய வந்தர்கள் வசிக்கிறார்கள். வித்யாப்யாசத்திற்கே பால்

யமே தருந்தகாலம், ஆகையினலே சகல ஆட்டபாடங்களை விட்டு யோக்கிய காலத்தில் (பால்யத்தில்) வித்தயை சம்பாதிப்பதி னின்றும் எப்படி யேர்பட்ட கெட்டகாரியங்களை நீக்கி துக்கமாகாமல் ஆனந்தமாகிறது. பால்ய காலத்தில் வித்தயை கற்க்காவிட்டால் முன்னே யுக்தவயதில் பிரயத்னப்பட்டு கற்றல் வித்தை வறலாம். ஆண், பெண் மக்களிடத்தில் தாய் தந்தைகள் ஊக்கம் வைத்து தங்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு பால்யத்தில் வித்தயை கற்பிக்க வேண்டும் ஏனென்றல் பிள்ளைகளை சம்ரக்ஷிப்பதும் அவர்களை நல் வழியில் கொண்டு வருவதும் வித்தயை கற்பிப்பதும் கடமை யல்லவா? மேல் சொன்ன விஷயத்தில் கவனிக்கா விட்டால் பிள்ளைகளின் ஆயுஸ்யத்தை நாசம் செய்வதற்கு சமானமாகிறது. சிலர்கல் பெண் பிள்ளைகளுக்கு வித்தயை கற்பிப்பதினல் ஆசாரபிரஷ்டா கிறர்கள் என்று சிலர் அபிப்பிராயப் படுகிறர்கள். வித்தையினல் கெடுதி வருவதென்று சொல்வது எவ்வளவு பக்ஷபாதம் வித்யாம் ரதத்தை பானம் செய்வதினல் ஆசாரப்ரஷ்ட்டாகிறரென்பது அருவருப்பான வார்த்தை அம்ரதபானத்தி னின்றும் லாபமாகுவதே தவிற எப்போதும் கேடாகமாட்டாது. சிலர் தங்களுடைய பிள்ளைகளின் பால விளையாட்டுகளை பார்த்து ஆனந்த படுவதற்காக தாங்கள் சம்பாதித்த திரவ்யத்தி னின்றும் நானுவிதமான ஆபரணங்களை தயார் செய்து தங்களுடைய பிள்ளைகளுக்கு போட்டு ஆனந்தப்படுகிறரென்பது மேலே இது எவ்வளவு தப்பு? பிள்ளைகளுடைய தெசபா னின்றும் தாய் தந்தைகள் சொத்துக்களை எப்பொழுதும் வீண் செலவு செய்யகூடாது அதற்கு பதிலாக புண்ணியம் வருகிற வழியில் செலவு செய்யவேண்டும் ஒரு வேளை தங்களுடைய கஷ்டத்தினல் சம்பாதித்ததாகட்டும் பூர்வபுண்ணியத்தினல் வந்ததாகட்டும் சம்பாதித்த த்ரவ்யத்தில் சில பாகத்தை (பிள்ளைகள் உணவுக்கும் உடைக்கும் வரை வைத்துவிட்டு) மற்ற த்ரவ்யங்களை தானவீரர் சேட் நாமசந்தஜி ஸ்ரீ ஜைன குலபூஷண சேட் மாணிக்க சந்து ஹிராசந்து திண்டிவனத்தில் ஸ்கூல் வைத்த சந்தானுத நைனர் தஞ்சாவூரில் ஸ்கூல் வைத்திருக்கும் நேமினுத முதலியார் இவர்களைபோல் பொருள்களை நல்வழியில் செலவு செய்யவேண்டும் அதனுல் தங்கள் த்ரவ்யம் செலவு செய்த புண்யத்தினல் தங்கள் பிள்ளைகளுக்கு மங்கள காத்தை செய்தது போலாகிறது ஏனென்றல் விசேஷமாய் தாய் தந்தைகள் பொருள் சம்பாதித்திருப்பதின் பொருட்டு வித்யார்சனை விஷயத்தில் அலட்சியம் செய்து ஆட்டபாட்

டங்களிலும் துர்வ்யசனங்களிலும் ஆசக்தராகிருர்கள். அப்போது

(ஶ்லோ) 𑌪𑌾𑌪𑌂 𑌵𑌰𑍍𑌧𑌯𑌤𑍇 𑌚𑌿𑌨𑍋𑌤𑌿 𑌕𑍁𑌮𑌤𑌿𑌂
𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑌨𑌾𑌂 𑌨𑌶𑍍𑌯𑌤𑌿
𑌧𑌰𑍍𑌮𑌂 𑌧𑍍𑌵𑌂𑌸𑌯𑌤𑌿 𑌤𑌨𑍋𑌤𑌿 𑌵𑌿𑌪𑌦𑌂
𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑌿𑌮𑍁𑌨𑍍𑌮𑌰𑍍𑌦𑌤𑌿 ।
𑌨𑍀𑌤𑌿𑌂 𑌹𑌂𑌤𑌿, 𑌵𑌿𑌨𑍀𑌤𑌿𑌮𑌤𑍍𑌰 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇
𑌕𑍋𑌪𑌂 𑌧𑍁𑌨𑍀𑌤𑍇 𑌶𑌮𑌂
𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌦𑍁𑌰𑍍𑌜𑌨𑌸𑌙𑍍𑌗𑌤𑌿𑌰𑍍𑌨 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇
𑌲𑍋𑌕𑌦𑍍𑌵𑌯𑌧𑍍𑌵𑌂𑌸𑌿𑌨𑍀.

பாபத்தை விருத்தி செய்கிருன். மித்யாத்வத்தை அடைகிருன் கீர்த்தியை நாசம் செய்கிருன் தர்மத்தை த்வம்சம் செய்கிருன் ஆபத்தை விஸ்தரிக்கிருன் சம்பத்தை நாசம் செய்கிருன் நீதியை போக்கடிக்கிருன் கெட்ட நீதியை செய்கிருன் சமமில்லாத கோபத்தை யடைகிருன் இறை லோகபரலோக சுகங்களை கெடுக்கிருன் துர்ச்சனனுடைய கூட்டுறவானது. இன்னும் எது எதுதான் செய்யமாட்டாது இப்படி கெட்ட மார்க்கத்தில் பிரவேசிக்கக்கூடும் ஆபரணங்களைப் போடுவதினல் மனிதர்களுக்கு சோபை உண்டாகக்கூடும் ஆனல் அது யௌவனம் இருக்கும் வரையில் நன்ருய் காண்கிறது யௌவனம்போன பின்பு எவ்வளவு விலை யுயர்ந்த ஆபரணத்தை போட்டாலும் அதுகளினின்றும் காந்தி உண்டாவதில்லை. "துர்சனர்களுடைய சகவாசம்" காலைநிழல் இது நின்றும் எப்படி அல்பசுகமோ அப்படியே யௌவனம் இன்னும் ஆபரணங்களை செய்வதற்கே சாதனமான த்ரவ்யம் அல்பசுகமானது (ஸ்திரமாய் இருப்பதில்லை) ஆகையினல் சிலகாலம் இருக்ககூடியதாயும், நாசமில்லாமலான தனத்தை சம்பாதித்து சத்குணமென்கிற ஆபரணத்தை போட்டு கொள்வதினின்றும் அடைகிற காந்தியானது நீ எவ்வளவு குரூபியாயிருந்தபோதிலும் மறைந்து போகின்றது. ஆகையினலே வித்தையானது ச்ரேஷ்டமென்றும் நாசரகிதமான தனமென்பதில் யாதொரு தடையும் இடையாது.

முக்கியமாய் பிரதி யொருவரும் ஜன்மாந்த்ரவரைக்கும் கவனிக்க வேண்டியதாயும் இன்னும் ஹாதபடத்தின் மேலே "சுவர்ணுக்ஷரத்தினலே எழுதி வைக்கவேண்டிய சங்கதி யாதென்றல் வித்தையாகிறதாயினலே ஞான மென்கிற த்ரவ்யத்தை அடைந்ததின் பிறகு மனம்போனபடி அதை வீண்செலவு செய்யக்கூடாது. இந்த

வித்தையாகிற த்ரவ்யமானது. பூர்வ புண்ணியத்தினாலே ப்ராப்தமாய் இருக்கிறது ஆதலால் நீதியை அனுசரித்து சகலரும் ஒப்புக் கொள்ள கூடியதில் அதிகமாய் செலவு செய்யவேண்டும் இன்னும் இந்த த்ரவ்யத்தை வெகு எச்சரிக்கையினால் காப்பாற்றவேண்டும். ஏனென்றால் நம்முடைய சரீரத்தில் காமக்ரோதாதிகளென்கிற திருடர்கள் நம்மை வஞ்சித்து இந்த சிரேஷ்டமான த்ரவ்யத்தை திருடுவதற்காக சமயம் பார்த்துக்கொண்டு மறைந்துக் கொண்டிருக்கிறார்கள் அதற்காக இந்த நாசமில்லாததான த்ரவயத்தை (வித்தயை) புத்தி என்கிற கஜானாவில் வைத்து யாதொரு தொந்தரவு வாரமல் பந்தோபஸ்துடன் காப்பாற்றி கொள்ளவேண்டும்.

இந்த ஞானமென்கிற த்ரவ்யத்தை மூட்டைகட்டி கஜானாவில் வைத்து விட்டால் அதனால் யாதொரு லாபமில்லாமல் நாசமாய் விடுகிறது. ஆகையினால் அந்த வித்தயை விஸ்வாசிகளிடத்தில் வட்டிக்கு கொடுக்கவேண்டும். அதாவது (ஞானோபதேசம் செய்யவேண்டும்) நம்முடைய குரு நமக்கு கொடுத்த ஞான த்ரவ்யத்தை நம்மிடத்தில் வட்டியைப்போல் கொடுத்திருக்கிறாரென்றே அறியவேண்டும் ஞானோபதேசம் அதிகமானால் இந்த மூட்டைக்கு வட்டி அதிகரித்து அபிவிர்த்திக்கு வருகிறது (ஞான மயமாகிறது) நாம் எவ்வளவு யோக்கியதையில் அதிகத்திலிருந்தாலும் நம்முடைய குரு எவ்வளவோ தாழ்ந்த பதவியிலிருந்தாலும் அந்த குருவை எப்போதும் திரஸ்கரிக்ககூடாது ஏனென்றால் நாம் சம்பாதித்த யோக்யதை கீர்த்தி குருவினுடைய க்ருபையினாலல்லவா? உபகாரம் செய்தவர் பொருட்டு நன்றி கெட்டவனென்பது அருவருப்பான வார்த்தை இருக்கட்டும் ஜகத்தில் பரோபகாரம் செய்யத்தகுந்த அனேக ஜனங்கள் இருக்கக்கூடும். ஆனால் வித்தயை கற்பிப்பவருக்கு யாரும் சமானமாக மாட்டார்களென்று கண்டிதமாய் சொல்லக்கூடும் நாம் வித்யா மாதாவினாலே ஞானமென்கிற தனத்தை சம்பாதித்த பிறகு பெரிய பெரிய கார்யங்களில் முதன்மையாய் போகக்கூடும் அப்போது அநேக தொந்தரவுக்கள் வரக்கூடும்.

அவ்விடத்தில் தைரியத்தை விட்டு விடாமல் நமக்கு ஞானம் கொடுக்கக்கூடிய வித்யாஜீவியை அலட்சியம் செய்து மறந்து விடக்கூடாது அத்யல்பச்ரமத்தினாலே கிடைத்த வஸ்துவை ஜாக்ரத்தையினாலே காப்பாற்றுவது மிகவும் ச்ரமத்தினாலே கிடைத்த வித்தயை அலட்சியம் செய்து போக்கடித்துக் கொள்வதென்றால் துக்கமாயும் இன்னும் அருவருப்பான வார்த்தை யல்லவா?? ஆகையினாலே வித்

யாவிசாரமுள்ளவர்கள் தங்களுக்கு தெரிந்த தெல்லாம் சகலருக்கும் உபதேசித்து ஞான வந்தர்களாகச் செய்து தங்கள் தர்ம தங்கள் தேச இன்னும் தங்களுடைய சமூகத்தை முன்னேற்றத்திற்கு கொண்டுவந்து சிரஸ்மரணிகளானல் வித்தையை சம்பாதித்த பலம் கிடைத்ததாகிறது. நம் ஜைன சிரோன்மணிகளுக்கு வித்யா லாப மும் தனலாபமும் தர்மாபிவ்ரத்தையும் சிராயுஷ்யமும் உண்டாகும் படி ஸ்ரீ ஜிநேஸ்வரனை பிரார்தித்து என் வியாசத்தை முடித்துக் கொள்கிறேன்.

விருதூர் திரு அப்பாண்ணை.

---

## ஸ்ரீ ஆத்மசிந்தனை.

---

நான் யார்? எங்கிருந்து வந்தேன்? நான் போகவேண்டியதெங் கே? நான் இந்த ஜென்மத்தில் செய்யவேண்டியதென்ன? என்கிற விஷயங்களை குறித்து ஆலோசிக்கிறதே. ஆத்மசிந்தனை. மனுஷ் யன் இவ்வுலகில் அவசியமாய் சாதிக்ககூடிய புருஷார்த் தங்கள் நான்கு. அது யாதென்றால்:—தர்ம, அர்த்த, காம, மோட்ச இந்த நான்கு புருஷார்த்தங்களில் மோக்ஷ மென்கிற புருஷார்த்தமே மேலானது. மோட்ச பதவியை அடைய வேண்டுமானல் மனுஷ்ய கதியே சரி, இதனல் மனுஷ்ய ஜென்மத்தினுடைய கௌரவம் எவ் வளவு உண்டென்பது தெரிகிறது.

2. இந்த தேகத்தில் ஆத்மன்வாசம் செய்துக் கொண்டிருப் பதினலேயே எல்லாம் நடப்பது பேசுவது செய்வது முதலான க்ரி யைகள் நடக்கிற தவ்வளவே. ஆகையினலே ஆத்மன் தேகத்தி னுடைய மூலத்தி னின்றும் பின்னமாகி இருப்பதினலே (வேரு பட் டிருப்பதினலே அது தேகத்தை விட்டு போய் விட்டதென்றால் இந்த திரேகமானது மண்ணின் பால் சேருகிறது. மனுஷ்யன் ஜீர் ணமான வஸ்திரத்தை விட்டு புதிய வஸ்திரத்தை அணிவதுபோல் ஆத்மன் ஜீர்ண சரீரத்தை விட்டு தன் கர்மானு சாரமாய் புதிய சரீ ரத்தை யடைவான். ஆத்மன் அமரன் நித்தியனுமாய் இருப்பவன். ஆகையினலே "என்னுது" என்று நாம் அகங்காரத்தினலே சொ ல்லுகிற சரீரம் க்ஷண பங்குரமானது. ஜீவாத்மன் மோகனீய கர் மத்தின் பிரபாவத்தினல் தன்னுடைய ஸ்வபாவத்தி னின்றும் பரி சுத்தமான நிஜஸ்வரூபத்தை மறந்துவிட்டு இந்திரிய விஷயங்களுக்

கும் க்ரோதாதி கஷாயங்களுக்கும் உட்பட்டவனாய் இந்த சம்சாரத்திலேயே பரம சௌக்கியமுண்டென்று நம்பிக்கை யுடையவனாகிறான். ஆகையினாலேயே அவனுக்கு வேறே வேறே கெதிகளில், மறுபடியும் மறுபடியும் கர்மபந்தமாய் சம்சாரத்திலேயே அநேக காலம் வரையில் சுழளவேண்டி யிருக்கிறது.

3. ஸ்வபாவத்தி நின்றும் ஞான தரிசன குணங்களுள்ள ஆத்மன் சுத்த ஸ்வரூபதாரி அதனால் அவன் கர்ம பந்தத்துக்கு உள்பட்டதினாலும் விகாரவச நானதினாலும் அவனிடத்தில் ராகத்வேஷ முதலான கஷாயங்கள் உதயமாகி அவனிட நிஜ குணங்கள் மறைபடுகிறது. ஆத்மன் தன்னுடைய மூலஸ்வபாவ ஆத்மத்யானத்தை செய்ய ஆரம்பித்தால் அவனிடத்திலிருக்கும் நிர்மல தரிசன, நிர்மல ஞான, நிர்மல சாரித்திர, சுகசாந்தி பரமானந்த முதலான நிஜ குணங்கள் ஸ்பஷ்டமாய் காட்டுகின்றன. நாம் நிஜாத்மத்யானத்தை யேகாக்ர சித்தத்தினால் செய்ய ஆரம்பித்தால் நம்முடைய ஆத்மன் கர்மபந்தத்தை நாசம்செய்து சம்சார சக்ரத்தி நின்றும் விடுபட்டவனாய் பரமாத்மபதத்தை அடைவதற்கு சமர்த்தனாய் இருக்கிறான். பரமாத்ம பதமடைந்த உடனே ஆத்மன் க்ருதக்ருத்தினாகிறான்.

4. ஜீவாத்மனுக்கு மனுஷ்ய ஜென்மம் கிடைப்பதே துர்லபம், மானுஷ்யதேகம் அகப்பட்டாலும் மேலான குலத்தில் பிறப்பது அதினும் துர்பலம் இந்த வார்த்தையின் கடமையை பிரதி ஒரு ஜினாபிமானிகள் அலக்ஷியம் செய்யாமல் இகபரங்களில் துக்கத்திற்கு காரண பூதமான இந்த அசாரசம்சாரத்தினுடைய மேலேயே அதனிடத்திலிருக்கிற எல்லா ப்ரம கவஸ்சத்துகள் மேலேயே இருக்கிற ஆசையை தான் சக்தியானுசாரம் தொலைத்து சாஸ்வத சுகத்தைக் கொடுக்கக்கூடிய ஸ்ரீ ஜினேஸ்வருடைய சரண கமலங்களை அடைந்து அவர் நமக்கு காண்பித்த சன்மார்க்கத்தை அனுசரித்து நடப்பதே முதல் முக்கிரமான கடமை. நர ஜென்மம் கிடைத்தாலும் யாராவது ஒரு பரமதயா சீலர் அனந்த ஞானிகள் குணசாலிகள் முதலான ஜினேஸ்வருக்கு சரமின்மையால் பகுகாலமாய் தன்னை ஆண்டுக்கொண்டிருக்கிற பவரோகத்தை பரிகாரம் செய்துக்கொள்வ தில்லையோ அப்பேர்பட்டவன் ஆத்ம கர்த்தகனல்லவா! எனென்றால் இந்த சம்சாரம் துய்யமயமானதும் விஷயசுகம் க்ஷணபங்குரமானதாலும் அறிந்தறிந்தும் மறுபடியும் விஷயோப போகங்களில் ஆசக்தனாகுவது எவ்வளவு தெரியாத் தன்மை! எல்லா கஷ்டங்களையும் துக்கங்களையும் போக்கடித்துக்கொள்ள பகு அனுகூல

மான இப்பேர்பட்ட அமூல்யமான நரஜென்மத்தி லிருக்கும்போதே துக்கமயமான இந்த சம்சாரக்கடலை தாண்டுவதற்கு யத்தனிப்பது அவசியமல்லவா?

5. இந்த சம்சாரத்தில் ஜீவாத்மன் ஸ்திதி கர்ப்பாதான முதல் அந்திய காலம் வரைக்கும் விசேஷ துக்கமாய் இருக்கிறது. ஏனென்றால் மனிதனுக்கு ஜனனமுதல் மரணம் வரையில் அடிக்கடி அனேக பிரகாரமான கஷ்டங்கள் வருவதுண்டு ஆத்மசிந்தனை செய்யாமல் துக்கத்தி னின்றும் விடுபடுவது அசாத்தியம் ஆகையினால் இந்த நரதேகம் கிடைத்த உடனே நம்முடைய ஸ்வகிருத்தை சாதிப்பது உசிதமென்று நம்முடைய தர்ம கிரந்தங்கள் முறையிடுகின்றன.

இன்னும் வரும்.

விருதூர். திரு. அப்பாண்டை நயினார்

அனந்தபுரம் ஸ்கூல்டீச்சர்,

ஜாகீர் ஆரணி.

---

## செல்வம்*

---

"திரைகடலோடியுந் திரவிய தேடு (ஔவை).

ஆழிபால் சூழப்பட்ட இந்நில உலகின்கண், 'கல்வியுடைமை பொருளுடைமை, யென்றிரண்டு, செல்வமுஞ் செல்வ மெனப் படும்'. என்று குமாரகுருபர சுவாமிகள் திருவாயால் மொழிந்தபடி செல்வத்தை† இருவிதமாகப் பிரிக்கலாம் அதாவது கல்விச் செல்வம், பொருட் செல்வம் என இருவகைப் படும். ஈண்டு பொருட் செல்வத்தைப் பற்றி ஒருவாறு கூறுவோம்.

செல்வமாவது இரத்தினம், பொன், வெள்ளி, தானியங்கள் முதலியன. இவ்வுலகில் இன்பத்தை அனுபவிப்பதற்கும், தான தருமங்கள் செய்து, பெருங்கீர்த்தி பெருகுவதற்கும் இன்றியமையாதது செல்வ மெனலாம். பொருளினால் எக்காரியமும் சாதிக்க

---

* எவரிடத்தும் நிலைத்திராமல் நீங்கிச் செல்லுந் தன்மையது எனப் பொருள்படும்.

† செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம் அச் செல்வம் செல்வத்துள் யெல்லாந் தலை என்ற பொய்யா மொழி பிரகாரம்; செல்வத்தை மூன்று விதமாகப் பிரிப்பர். அதாவது செவிச் செல்வமாம்,

லாம். முடியாத காரியத்தையும் முற்றுவிக்கலாம். இம் மேன்மையான பொருளின்றேல், இவ்வுலகிலும், அவ்வுலகிலும் சிறப்படைய முடியாது. இதைப்பற்றியே, பொய்யா மொழியாகும்;

> "அருளிலார்க் கவ்வுலகமில்லை பொருளிலார்க்
> இவ்வுலக மில்லாகி யாங்கு"

என்று அருளிச் செய்தார்போலும் அன்றியும்; அரசர்களும் முனிவர்களும் வேண்டுவது இச் செல்வத்தையே யாம் "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியும்" என்றும் மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

இங்கு கண்ணனை பார்க்க எண்ணிப்போன குசேலர் வாயில் காப்போரிடம் பட்டபப்பாட்டை பென்னவென்று இயம்புவது.

> "பொருள்நனியுளனென்றி யாரும் புகலுமோர் வார்த்தைவேண்டும்
> இருகையுங் கடகம் வேண்டும்; இலங்கு குண்டலங்கள் வேண்டும்
> வருவிரலாழி வேண்டும்; மார்பிடை மதாணி வேண்டும்
> உருவ முத்தாரம் வேண்டும்; உயர்ந்த பட்டாடை வேண்டும்."

> "சிவிகை முன்னூர்தி வேண்டும்; செழும்பொருட் செலவு வேண்டும்
> குவிகையே வலரும் வேண்டும்; கோலமார்ந்திருக்க வேண்டும்
> கவிகைதாங்குநரும் வேண்டும்; கையுறை சிறப்ப வேண்டும்
> அவிகையில் விளக்கம் வேண்டும்: அரசவை குறுகுவார்க்கே."

ஆனதால் பொருள் அவசியம் என்பது புலனுகின்ற தல்லவா!

கல்வி கற்றற்கும், பசியால் வருந்தாது கவலையற்றிருந்து கல்வி பயில்வதற்கும், அக்கல்வியால் மேன்மை யடைவதற்கும் செல்வமே வித்தாகும். "துஷ்ட பேண்டீரைக் கொண்டு நடாத்தும் விருந்தோம்பல எப்படி பயனற்றதாகிவிடுமோ அவ்வாறே தரித்திரன் கற்ற கல்வி பயனற்றதாகி விடும்.

> "எனைத்துணைய வேணுமிலம் பாட்டார் கல்வி
> தினைத்துணையுஞ் சீர்பாடிலவாம்—மனைத்தக்காள்
> மாண்பிலாளாயின் மணமக னல்லறம்
> பூண்ட புலப்படாபோல்"

என்றார் குமர குருபரர்.

செல்வமில்லாதவர்கள் வறுமையினாலும், பகைவர்களினாலும், பிணிகளினாலும் துன்பப்படுவார்கள். பொருளில்லாதவர்களை தாய் தந்தை மனைவி மக்கள் முதலிய யாவரும் அவமதித்துக் கைவிடுவர். சுற்றத்தார்களும் கைவிடுவார். யாவரும் சமீபத்தில் நெருங்கி வர

ரார் என்பது திண்ணம். ஈண்டு தரித்திரத்தின் வர்ணிப்பைக் கவனிக்கத் தக்கது.

" தரித்திரம் மிக்க வனப்பினை ஒடுக்கிச்
சரீரத்தை உலர்தர வாட்டும்;
தரித்திரம் அளவாச் சோம்பலை எழுப்பும்
சாற்றரும் உலோபத்தை மிகுக்கும்
தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே
தரும்பரும் கலாம்பல விளைக்கும்;
தரித்திரம் அவமானம் பொய்பேராசை தரும்;
இதிற்கொடிய தொன்றிலையே" (குசேலபாக்கியானம்.)

கல்லாதவனாயினும் பொருளுடையவனாயின் அவனிடத்தில் யாவரும் சென்று உபசரிப்பர். பொருளில்லாத விவேகியாயினும் யாவரும் அவனை அவமதிப்பர்.

" கல்லாரனே யானாலுங் கைப்பொரு ளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங்கெதிர் கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள், மற்றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாதவன் வாயிற் சொல்."

" பொரு ளல்லவரை பொருளாகச்
பொரு ளல்லதில்லை பொருள் "

என்னும் பாடல்களை அறியற்பாற்றன்று. ஒருவன் பணக்காரனாயினும் அவனை நன்கு மதிப்பர். அவர்கள் பகைமையும் வேரோடு அறுபட்டு என்றும் பிரியாத நேசர்களாவார்கள்.

இன்னும்,

" சத்துவம் புத்திவித்தை சதுர் விதார்த்தங்களான
இத்தனை விதமும் செல்வம் இல்லைபோல் இல்லையாகும்
சத்துவம் புத்திவித்தை சதுர்விதார்த் தங்களான
இத்தனை விதமும் செல்வம் எய்திடில் எய்துமன்றே."

என்றவாறு, அறம்பொரு ளின்பம்வீடு, அறிவு ஞானம் வசிமை இவைகளைப் பயப்பது இச்செல்வமேயாகும் இப்பொருளின்றேல் அவைகள் குன்றிவிடும்.

(தொடரும்)

கூறைநாடு எஸ். என். இராமு.

## இரகஸ்யபுரி மர்மம்.

### அத்தியாம் 2.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-4, பக்கம் 96)

### புஜபலபராக்கிரம வீரசிங்கம் சங்கர்.

நாம் நவநீத கிருஷ்ண புரத்தினின்று சற்று பக்கத்திலுள்ள ஊரில் இருக்கும் போலீஸ் ஸ்டேஷனைக் கவனிப்போம்.

இரவு மணி பதினொன்று போலீஸ் ஸ்டேஷனில் பீட் இருக்கும் கான் டேபிளைத் தவிர மற்றையோரெல்லாரும் ஓர் அறையில் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். அந்த அறையில் ஒரே ஒரு சாளரந்தா னுண்டு அச்சாளரம் ஒரு கண்ணாடிக் கதவினால் மூடப்பட்டிருந்தது. அறையினுள்ளே ஐந்து போலீஸ்வீரர்கள் நித்திரை செய்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் நால்வர் அவ்வூர் போலீஸ் உத்யோகஸ்தர்கள் மற்றவர் சென்னையிலிருந்து வந்த அந்தரங்கப் போலீஸ் தலைவர். இன்னவர் பெயர் சங்கர். இவர் தேக வலிமையுடையவ ராதலாலும் யுக்தி மிகுந்த வராதலாலும் அநேகக்கள்ளர் கூட்டங்களை வேரோடு களைந்தெறிந்த வீரசிங்கமானதால் இவருக்கு 'புஜபலபார்க்ரம வீரசிங்கம் சங்கர்' எனப் பட்டப் பெயரிடப்பட்டது. இன்னவர் சென்னையை விட்டு நாம் இப்பொழுது பார்க்கும் இடத்திலுள்ள கள்ளர் கூட்டங்களைப் பிடிப்பதற்காக அன்றுதான் அவ்வூருக்கு வந்தவர். போலீஸ் ஸ்டேஷனிலே தானிறங்கி ஜாகையை வைத்துக் கொண்டார். நாம் பார்க்கும்பொழுது இன்னவர் படுக்கையில் நித்திரை செய்துக் கொண்டிருந்தார்.

அவர் தற்செயலாய் ஜலஸ்பரிசத்திற்குப் போவோம் என்று எழுந்திருந்தார். அன்று வெளியில் வீசிய நிலவு வெளிச்சம் கண்ணாடிக் கதவுள்ள சாளரத்தின் வழியாய் உள்ளே வீசிற்று. சங்கர் அந்த ஒளியில் இரண்டு மனிதர்களின் தலை நிழலைக் கண்டார். நன்றாகக் கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தார் ஆமாம்! அது மனிதர்களின் நிழலே என நிச்சயத்துக் கொண்டார். உடனே ஜன்னலைப் பார்த்தார். பார்த்த மாத்திரத்திலே இரண்டு மனிதர்கள் அறையின் வெளிப்புறமாய்த் தங்களது தலைகளைத் திருப்பி வைத்துக் கொண்டிருந்தார்கள். பார்த்தார் சங்கர். இவர்கள் யாவரெனக் கண்டு பிடிக்க வேண்டுமென்று, மெதுவா எழுந்து கதவை

சப்தம் செய்யாமல் திறந்து வெளியில் வந்தார். நிச்சப்தமா யிருந்தது மெதுவாக அறையின் மறுபக்கம் வந்தார். அங்கு பார்த்ததும் இருவர்கள் முற்கூறிய நிற்பதைக் கண்டார். இவர்கள் இருகுழல் துப்பாக்கிகளை கையில் பிடித்தவண்ணமா யிருந்தார்கள். மற்றும் நான்கு பெயர்கள் மெதுவாகப் போலீஸ் வீரர்களின் உடைமுதலியவைகள் அறையைக் கன்னம் வைத்து உட்புகப் பார்த்தார்கள். அதே சமயத்தில் முன்சொன்ன இருவர்கள் கழுத்திலேயும் இரண்டு பலமான கைகள் வந்து கட்டி இருக்கிற்று. பின்புறமாய் இருந்து கைகள் வந்ததால் இன்னதென்று கண்டு பிடிக்கவாவது அல்லது துப்பாக்கியால் சுட்டுக் கொல்லவாவது அவ்விருவர்களுக்கு முடியாமற் போயிற்று.

கனவான்களே! இத்திருடர்கள் சாதாரணமாய்ப் பணத்திற்காசைப்பட்டுத் திருடும் யோக்கிய ரல்லர். வெகு காலமான கூட்டுக் கொள்ளைக்காரர்கள் இவர்கள் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டுப் போலீஸ் உடுப்புக்களைத் திருட எண்ணி முற்கூறியவாறு போலீஸ் ஸ்டேஷனில் திருட ஆரம்பித்தார்கள்.

முன் சொன்னவாறு இரும்புக் கைகள்போல உள்ள இரண்டு கைகள் வந்து தங்களது கழுத்தை நெறிக்கவே இவ்விரண்டு திருடர்களுக்கும் சப்தம் போட முடியாமல் போய்விட்டது. மற்றைய நால்வரும் இதை யறியாதவர்களாய்ச் சுவரைக்கன்னம் வைத்துக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் அவர்கள் சுவரின் மறுபக்கத்திலிருந்தார்கள். அந்த இருதிருடர்களும் சுவாசம் விடமுடியாமல் தங்களது முழுபலத்தையும் உபயோகித்து அந்தக் கைகளினின்றும் விடுவித்துக் கொள்ளப் பார்த்தார்கள். அவ்வாறு செய்தபோது அக்கைகள் உடைய தேகத்துடன் அவ்விருவர்களும் தரையில் உருண்டார்கள். அச் சமயத்தில் அவர்கள் கையிலிருந்த துப்பாக்கி லொன்று படீரென்று வெடித்தது.

ஆனால் அவர்கள்மேல் பலமாய அமுக்கிக் கொண்டுப் படுத்திருக்கும் சங்கருக்கு—முற்கூறியவாறு வந்தகைகள் புஜபலபராக்கிரம வீரஸிங்கம் சங்கருடையனவே—யாதொரு விதமான ஆபத்தும் நேரிடவில்லை.

இச் சப்தத்தைக் கேட்ட நால்வரும் அதிகத் திகிலடைந்து இவ்விருவர்கள் நின்ற இடத்திற்கு ஓங்கிய வாளுடன் ஓடி வந்தார்கள். பார்த்தார் நமது சங்கர். உடனே தயாராகிவிட்டார் சண்டைக்கு எழுந்தார். வருகிறவர்களை ஒவ்வொருவராய்த் தந்திரமாய்த் தூக்கி எறிந்தார். ஆனால் கடைசியில் வந்த அவர்கள் தலையன் பலமுள்ளவனாதலால் மற்றவர்களைப்போல் அவ்வளவு இலேசாய்த் தூக்கியெறிய முடியவில்லை. இருவர்களுக்கும் பலமான சண்டை நிகழ்ந்தது. இருவரும் ஒருவருக்கொருவர் பின் வாங்கி

னவ ரல்லர். மல்யுத்தத்தில் தேர்ந்த புலிகள். போலீஸ் வீரசிங்கமாகிய நமது சங்கர் தனது பலத்தையெல்லாம் வைத்து அத் திருட்டுத் தலைவன் கொள்ளிவீரனை—(அதுதான் அவன் பெயர்)—க் கழுத்திலிருக்கிப் பிடித்தார். அதே சமயத்தில் கீழேவிழுந்து கிடந்த ஒருவன் ஒரு பெரிய தடியால் சங்கர் தலையில் பலமாயடித்தான். பாவம்! சங்கர் மூர்ச்சையாய்க் கீழே விழுந்தார். திருட்டுத் தலைவன் சங்கரைத் தூக்கிக் குகைக்குக் கொண்டு போகும்படி உத்திரவிட்டுத் தன் குதிரை மேலேறி வெகு வேகமாய்ச் சென்றான். தலைவன் உத்திரவின்படி கள்ளர்கள் சங்கரை எடுத்துப் போனார்கள்.

உள்ளிருந்த போலீஸ்வீரர்கள் இவர்கள் சண்டை செய்யும் சப்தத்தால் எழுப்பப்பட்டு எழுந்திருந்து தங்களது அறைக்குச் சென்று தடிகளை எடுத்து வருவதற்குள் சங்கர் சென்றுவிட்டார் திருடர்களுடன்

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

**P. N. Sankaranarayanayyar,**
**Son of**
**P. S. Narayanaswami Ayyar Avl.,**
*Pananjady.*

---

புதிய புத்தக விளம்பரம்.] ஸ்ரீ [புதிய புத்தக விளம்பரம்.

# ஜிநபாரதம்.

இது, சமஸ்கிருதத்திலிருந்த ஜைன பாரதத்தைத் தழுவித் தமிழில் எழுதப்பட்டது. சைவ வைஷ்ணவ மதங்களைச் சார்ந்து இப்போது தமிழ் நாட்டில் உலவிவரும் பாரத சரித்திரங்களில் இயற்கைக்கு விரோதமாகப் பற்பல விஷயங்கள் காணப்படுவதால் பாண்டவர்களின் உண்மை சரித்திரத்தைக் காணமுடியாதிருக்கும் குறையை நிவர்த்திக்கக் கருதி ஜைனமதப் பெரியோரால் எழுதப்பட்ட உண்மையான கதை அடங்கிய பாரதமிது. இதனைப் படிப்பதால் நல்லறிவுண்டாவதோடு மற்றைய பாரதங்களுக்கும் இதற்கும் உள்ள வித்தியாசத்தை நன்குணர்ந்து கொள்ளலாம். எல்லோருக்கும் உபயோகமான புத்தகமிது.

இதன் விலை அணா-6,
தருமசீலன் பிரஸ்,
26. ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

# ஏழைகளுக்கேற்ற அவிழ்தம்.

## சர்வரோக நிவாரணி

## அல்லது

## வீரமாமுனிவர் சுகந்தரும் மாத்திரை.

இது எல்லா வகையிலும் குணமே செய்கின்ற நல்ல மருந்தென யாவரும் ஒப்புக்கொண்டு எங்கும் நன்மதிப் படைந்துள்ள பத்தியமில்லாத ஓர் பரம சஞ்சீவி.

இச்சுகந்தரும் மாத்திரை தேகதாருட்டியத்தையும், தாது பலத்தையும், வீரிய விருத்தியையும், இரத்த புஷ்டியையும் உண்டாக்கி இழந்துவிட்ட ஆண்மையை மெய்யாகவே மீண்டும் பெறுவிக்கும். இதை நம்பிக்கையாய் உபயோகித்து வந்தால் நீடித்த காலமுள்ள பாண்டு, கிராணி, க்ஷயம், நீரிழிவு, மேகம், வாதம், காக்கைவலி, குன்மம், சுரக்கட்டி முதலிய அநேக வியாதிகள் நிச்சயமாகவே நீங்கிக் குணமாவது பிரத்தியக்ஷம். ஸ்திரீகளுக்குண்டாகும் சூதக சம்பந்தமானஎல்லா வியாதிகளுக்கும் இதுவே கைகண்ட சித்த அவிழ்தம். குழந்தைகளின் பிணியைப்போக்கி அவர்கள் ஜீவனை இரக்ஷிக்கவும் அவர்களுக்குத் தேகபுஷ்டியைத்தந்து வளர்க்கவும் இது தவறாத ஔஷதம். விசேஷமாயிது அனைவருக்கும் சடிதியாய் உண்டாகும் விஷக்காய்ச்சலையும் காலராவென்னும் கொள்ளை வியாதியையும், வாந்தி, அஜீர்ணம், பேதி, வயிற்றுவலி, அதிசாரம் முதலிய கொடியனவும் ஆபத்துள்ளனவுமான பல வியாதிகளையும் உட்கொண்ட உடனே அதிதீவிரமாயகற்றி ஆச்சரியத்தை விளைவிக்கும் அற்புத சத்திவாய்ந்த ஓர் அருமருந்து. இதைப் பரிக்ஷித்தவர்களுக்கே இதன் அருமை விளங்கும் இவ்வுண்மையை ஒருமுறை வாங்கிப் பரிக்ஷித்த எவரும் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது.

இவ்வுத்தம மாத்திரையானது மகா கீர்த்திப்பிரதாபம் பெற்ற ஐரோப்பிய பண்டிதரும் சத்தியவேத குரு முனிவருமான சங்கைக்குரிய இராஜரிஷி வீரமாமுனி சுவாமியவர்களால் லோகோபகாரமாய்த் தந்தருளப்பட்ட உண்மை ஔஷதம். இம்மகாமுனிவர் மானிடதத்துவங்களையும்தாது தாவரவர்க்கங்களின் இயற்கைக் குணங்களையும் ஐயந்திரிபறக் கற்று அநுபவமுதிர்ச்சி பெற்றவராகையால் இரத்தமே பிராணனுக் காதாரமென்னும் போதனானுசாரத்தைக் கடைப்பிடித்துச் சுத்தஇரத்தத்தைச் சுரப்பிக்கும் சேர்க்கைத் திரவியங்களான மூலதாதுக்களையும் அருமையாய்க் கிடைக்கக்கூடிய வன மூலிகைகளின் சத்துக்களையும் கல்லுப்பு அயம் முதலிய மேலான ஔஷதங்களையும் கொண்டு இவ்வரிய யோகமுறையை அருமையாய் முடித்து ஏழைகளுய்யுமாறு பரோபகாரமாய் வெளிப்படுத்தியருளினார். இது பாரம்பரிய வழியாய் செய்முறை தவறாது திருநெல்வேலி ஜில்லா மணப்பாடு வீரமாமுனிவர் ஔஷதசாலையில் சீ. ஏ. சில்வெயிரா பண்டிதரவர்களால் சித்தஞ் செய்யப்பட்டு சர்க்காரில் உரிமைச் சுதந்தரம் பதிவாகி வெளிவந்து உலகெங்கும் பிரக்யாதி அடைந்து நாங்களிதனை மொத்த விற்பனைக்கென்று ஏராளமாய்த் தருவித்துச் சொற்ப விலைக்குக் கொடுத்து வருகிறோம். குறைந்த விலையை முன்னிட்டு மருந்தின் குணத்தைக் கேவலமாய் நினைக்கவேண்டாம். இதனால் யாதொரு திரவியலாபம் வேண்டாது தரித்திரர் முதல் தனிகர்வரையும் தாராளமாய் வாங்கி உபயோகித்து எல்லா வியாதிகளினின்றும் சுகம்பெற வேண்டுமென்பதே இதைச் செய்தவரின் முக்கிய கருத்தென்பதை ஆன்றோர் அறியக்கடவர்.

| | | | | |
|---|---|---|---|---|
| இதன் விலை 100-மாத்திரைகள் அடங்கிய பெட்டி | 1-க்கு | 1 | 0 | 0 |
| ,, | 5-க்கு | 4 | 6 | 0 |
| ,, | 10-க்கு | 7 | 8 | 0 |
| ,, | 25-க்கு | 16 | 0 | 0 |

தபால் செலவு முதலியன பிரத்தியேகம்.

210453

T. M. மாணிக்கம் பிள்ளை,

சுருட்டு வியாபாரம்,

60, பந்தர் தெருவு, சென்னை.

---

வீரமாமுனிவர் ஔஷதசாலை,

எட் ஆபீஸ், மணப்பாடு, திருநெல்வேலி, ஜில்லா.

Dharmaseelan Press, Madras.

அழகுள்ளவை ! விலை சகாயம் !!

## இமிடேஷன் புது மாதிரியான துப்பட்டாக்கள்.

இந்த துப்பட்டாக்கள் நல்ல பட்டு நூலினால் நெசவுசெய்யப் பட்டுள்ள குலாபி, பச்சை, புளூ, வெள்ளை 5 முழ நீளம் மூன்று முழ அகலம் உள்ளவை. துப்பட்டா 1-க்கு ரூ. 3 12 0

ஆதிலட்சுமி சில்க் அவுஸ்,
பாலகிருஷ்ணன் லேன், ஜி. டி சென்னை.

---

## தருமசீலன் பிரஸ் விளம்பரம்.

நமது தருமசீலன் அச்சுக்கூடத்தில் தமிழிலும், இங்கிலீஷி லும், சகாயமான சார்ஜில் அச்சுவேலைகள் வெகுசுத்தமாகச்செய்து கொடுக்கப்படும். வெளியூரிலிருந்து, நம் ஆபீஸில் அச்சுவேலைகள் செய்துகொள்ளப் பிரியமுள்ளவர்கள், அச்சிடவேண்டியகாப்பிகளை நமக்கனுப்பி, பாரம் ஒன்றுக்கு ஒருரூபா விகிதம் புரூப் சார்ஜூம் கொடுத்தால் அவ்வேலைகளை நாமே புரூப்பார்த்து முடித்துக்கொடுப் போம்.

மானேஜர்,
தருமசீலன் பிரஸ்,
½ பாலகிருஷ்ணன் சந்து,
ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

---

இனாம் ! "கிலாபத்" இனாம் !! இனாம் !!

இஸ்லாம் மார்க்க உண்மைகளையும் ராஜீய தேசிய விஷயங்களை யும் தன்னுட்கொண்டு, ராயல் 8-பக்கங்கொண்ட பெரிய ஸைஸில் ஒவ்வொரு சஞ்சிகையும் 48-பக்கங்களுடன் நல்ல உயர்தர கிளேஸ் காகிதத்தில் மிக நேர்த்தியாகச் செந்தமிழில் அச்சிடப்பட்டு ஒவ் வொரு மாதம் முதல் தேதியிலும் வெளியாகும் "தாருல் இஸ்லாம்" என்னும் மாதப் பத்திரிகைக்கு 1923-ல் சந்தாதாரராகச் சேரும் ஒவ்வொரு புதிய நண்பருக்கும் ஒவ்வொரு கிலாபத் புத்தகம் இனா மாகக் கொடுக்கப்படும். கொஞ்சம் பிரதிகளேயிருக்கின்றன. முந் துங்கள்! முந்துங்கள்.

வருஷ சந்தா ரூ 3-0-0. அயல்நாடுகளுக்கு ரூ 4-0-0

"தத்துவ இஸ்லாம்" நான்காம் கமலம் 480-பக்கங் கொண்ட பைண்டு புத்தகம் விலை ரூ. 3—0—0.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,
16, 17, லக்கின்டுலேன்பீச், மதராஸ்.

சுகானந்த

# அ[illegible]த்தங்க திராவகம்.

அனுபவமானது!  பிரசித்தி டெற்றது!!  சஞ்சீவி போன்றது!!!

## இதன் முக்கிய குணங்களாவன:—

இது வாக்கையும் ஆகையையும் பலப்படுத்தும். துர்ப்பலப்பட்டவர்களின் தோழனும் ஊன்று கோலுமாம். பலம் குறைந்து ஆசா

வற்றவர்களுக்கு அன்பான நண்பன். நவரத்தினங்களைப்போல் உபயோகப்படும் அருமையான நவநீதம். இரைப்பை, ஈரல், தலைமூளை, நீர்ப்பை ஆகியவைகளைப் பலப்படுத்தி, அவைகளைச் சீர்ப்படுத்தி உற்சாகப் படுத்தும் அற்புத ஔஷதம். இது பெரும்பான்மையும் இரத்தத்தை உண்டாக்கி, அதனை விருத்தி செய்வதில் மிகவும் சிறந்தது. இரத்த மில்லாமல் தேகத்தை வெண்மை நிறமாக்குகின்ற பாண்டு சோகை, காமாலை, சுரக்கட்டி, முதலிய ரோகங்களைக் குணப்படுத்துவதில் இது முதன்மை பெற்றது. சில செந்தூரங்கள், பஸ்பங்கள், சூரணங்கள் முதலியவைகள் இரைப்பை, சிறுகுடல் ஆகியவைகளில் தங்கி நின்று அவைகளைக் கெடுப்பதுபோல் கெடுக்காமல் அங்கு சென்ற க்ஷணமே சீரணமாகி அங்குள்ள தோஷத்தை நீக்குவதில் இது பெயர் பெற்றது. இது சித்தர் மூலிகைகளின் சத்துக்கள் சம்பந்தமாகச் செய்யப்படுவதால் அதிக உன்னதமானது. தளர்ந்த நரம்புகளைப் பலப்படுத்தி உற்சாகத்தைக் கொடுத்து முறுக்கேற்றி ஸ்திரப்படுத்தும் அற்புத சஞ்சீவியிது. இது அதிமூத்திர ரோகத்தை அறவே நீக்கும். நாள்பட்ட பேதிகளை கிரமேணுவாகக் கட்டுப்படுத்திச் சுபாவபலத்தை யுண்டாக்கும். இது நடப்பதாலும், படிகள்மீது ஏறுவதாலும், பேசுவதினாலு முண்டாகும் ஆயாசம், இளைப்பு, களைப்பு, கஷ்டசுவாசம் முதலியவைகளை நீக்கிச் சுவாசப்பையைச் சீர்ப்படுத்தி, பலப்படுத்திச் சுபாவகுணத்தை யுண்டாக்கும். இது பால் நெய் முதலிய வஸ்துக்களை சீரணப் படுத்துவதில் மிகவும் கீர்த்திபெற்றது. இது ஏழைகளுக்கும் உபயோகப்படும்படியாகக் குறைந்த விலை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

20 நாள் மருந்து ரூ. 1 4 0  40 நாள் மருந்து ரூ. 2 0 0

தர்மசீலன் பிரஸ்,

மண்ணடி போஸ்டு, மதராஸ்.


...HARMA
No. 26, Acharappan Stree...
19 OCT. 23